பக்கங்கள் 17+ 02

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 30 திங்கட்கிழமை 15.09.2025 | அதிர்வு 46

## மீண்டும் கொழும்பில் குடியேறுவாரா மஹிந்த?



“தங்காலை, கால்டன் இல்லத்தில் தற்போது தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கொழும்பில் மீண்டும் குடியேறு 05▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்



(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாட்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். நல்லூரில் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயம் அருகே 02▶






# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் உண்ணா விரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்று,

தொடர்ந்து நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

இதன்போது பொதுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர்.

(03ஆம் பக்கம் பார்க்க)



















# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று உணர்வெழுச்சியுடன் ஆரம்பம்

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)
தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளராக இருந்த திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி உணவையும் நீரையும் தவிர்த்துப் போராட்டத்தை ஆரம்பித்தார்.

அவரின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் 1987 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு உயிர்நீத்தார்.

யாழ்ப்பாணம், ஊரெழுவைச் சேர்ந்த திலீபனின் இயற்பெயர் இராசையா பார்த்தீபன் என்பதாகும்.


















# சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம்

**(எஸ்.நிதர்ஷன்)**

செம்மணி உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் காணப்படும் மனிதப் புதைகுழிகளுக்கும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் இன்று கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மாற்றத்துக்கான இளையோர் குரல் அமைப்பால் யாழ். மருதனார்மடம் பகுதியில் இன்று காலை இந்தக் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இதில் மாற்றத்துக்கான இளையோர் அமைப்பின் உறுப்பினர்கள், மருதனார் மடம் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்

















# தீவகத்தில் திலீபனின் நினைவேந்தல் நிகழ்வு

(பிரபாகரன் டிலக்சன்)

தியாக தீபம் திலீபனின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் வேலணை - வங்காளவடிச் சந்தியில் உள்ள பொது நினைவுத் தூபியில் இன்று காலை 10.30 மணியளவில் இடம் பெற்றது.

இதன்போது மாவீரர் ஒருவரின் தாயார் மற்றும் சகோதரரால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரரின் பெற்றோரும் மூத்த போராளியுமான பசீர் காக்காவினால் மலர் மாலை சூட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து மலர் அஞ்சலி இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவின் உறுப்பினர்கள், வேலணை பிரதேச செயலக உறுப்பினர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.







## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதற்கு இதுவரையில் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சந்திப்புகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காகக் கொழும்பு வர நேரிட்டால் மஹிந்த ராஜபக்ஷ வருவார். பிறகு அவர் ஊருக்குத் திரும்புவார்."

- என்றும் சாகர காரியவசம் மேலும் குறிப்பிட்டார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தொடரும் கொடூரச் சட்டம்

இலங்கையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குவது என்பது 'பிள்ளையார் கல்யாணம் போல' நாளை, நாளை என்று தள்ளிப் போகும் விடயம் என இப் பத்தியில் பல தடவைகள் சுட்டிக் காட்டி விட்டோம். இப்போதும் அதுதான் நடப்பதாகத் தோன்றுகின்றது.

இந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை கையாளும் ஆளும் தரப்புக்கள் அவ்வப்போது விடயத்தில் பண்ணும் ஒரு 'சுத்துமாத்து' கவனிக்கத் தக்கது.

எப்போது, எப்போது எல்லாம் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக சர்வதேச அழுத்தங்கள் அதிகரிக்கின்றனவோ அவ்வப்போதெல்லாம் அந்தச் சட்டத்தை மாற்றுவதற்கான அல்லது பிரதியீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாக கொழும்பு காட்டிக் கொள்ளும். மாற்றுச் சட்ட மூலங்களும் அவற்றுக்கான வரைவுகளும் கூட வெளியாகும். ஆனால் சர்வதேச அழுத்தத்துக்குரிய களநிலை மாறியதும் எல்லாவற்றையும் பொத்து என்று போட்டு விடுவார்கள். சட்டம் தன்பாட்டில் தொடரும்.

இதுவே இவ்விடயத்தில் அண்மைக் காலங்களில் கொழும்பு அரசுகளினால் முன்னெடுக்கப்படும் தந்திரோபாயமாக இருந்து வருகின்றது. இந்தப் பின்புலத்தில்தான் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் கடந்த 47 வருடங்களாக இந்தக் கொடூரச் சட்டம் இலங்கையில் நிலை பெற்று நீடிக்கின்றது.

இப்போதும் கூட ஜெனிவா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்தச் சட்டம் தொடர்பில் அழுத்தம் தீவிரமாகி, விவகாரம் கழுத்தை இறுக்கும் விடயமாக மாறியதும், இதோ சட்டத்தை மாற்றுகின்றோம் என்று அறிவிப்புக்கள் - பிரகடனங்கள் - வெளியாகின.

மீண்டும் ஒரு தடவை செப்டம்பர் மாதத்தில் பயங்கரவாதத் தடை சட்டம் மாற்றப்பட்டு விடும் என்று ஓகஸ்டில் அறிவிக்கப்பட்டது. இப்போது செப்டம்பர் மாதத்தில் அரைவாசிக் காலம் தாண்டியாகி விட்டது. இன்னும் மாற்றுச் சட்டத்துக்கான நகல் வடிவம் வெளிவரவில்லை. தயாரிப்பு மும்முரமாக நடந்து கொண்டிருப்பதாக தினசரி ஆரவாரங்கள்தான் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் தற்போதைய அமர்வு அடுத்த மாத முற்பகுதியில் முடிவடையும் வரை இந்த ஆரவாரம் நீளும்.

அது முடிந்ததும், இந்த விடயத்தைப் பொத்து என்று போட்டு விடுவார்கள். மாற்றீட்டுச் சட்டத்துக்கான வரைவு தொடர்பில் கட்சிகளிடையே இணக்கம் வரவில்லை என்று காரணம் காட்டி விவகாரம் மூடிக் கட்டப்பட்டு விடும். ஆக ஜெனிவா அமர்வு நடைபெறும் வரை இதோ மாற்றீட்டுச் சட்டம் வருகின்றது என்று ஆரவாரங்கள் தொடரும். அவ்வளவுதான்.

இதுதான் கடந்த காலத்திலும் நடந்தது. இப்போதும் நடக்கின்றது.

ஜெனிவாவில் இச்சட்டம் தொடர்பில் இலங்கைக்கு எதிரான சர்வதேச அழுத்தம் கடுமையாகி வருகின்ற சூழ்நிலையில், இதோ மாற்றீட்டுச் சட்டம் வருகின்றது என்று ஆரவாரமும் கொழும்பில் பெருத்த எடுப்பில் வெளியாகிக் கொண்டிருக்கின்றது.

இருக்கும் சட்டம் தொலைந்து, மாற்றீடு ஏதும் நடைமுறையில் வந்த பின்னர்தான் அது பற்றி நம்ப முடியும்.

# மாகாண சபைத் தேர்தலைப் பழைய முறையில் விரைவில் நடத்தப் பரிசீலிக்கின்றது அநுர அரசு




பழைய முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்துவது குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க தலைமையிலான அரசு பரி சீலித்து வருகின்றது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய செயல்முறை முடிவடைந்த பின்னரே தேர்தல் நடத் தப்படும் என்று அரசு முன்னர் கூறியி ருந்தது. எனினும், புதிய எல்லை நிர்ணய செயல்முறை சிக்கலானது, நீண்டது என்பதால், அடுத்த தேர்தலை, 1988ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் சட் டத்தின்கீழ்நடத்தஆலோசிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

தாமதமின்றி மாகாண சபைத் தேர்தலை நடத்த அரசு மீது அழுத்தம் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்தத் திட்டத்தை அரசு பரிசீலிக்கின்றது என்றும் கூறப்படுகின்றது. இந்தநிலையில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இந்தியப் பிரதிநிதி மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அரசை வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத் தக்கது.

# நீதி அமைச்சர் தலைமையில் விசேட குழு ஜெனிவா விஜயம்

நீதி அமைச்சர் ஹர்சன ராஜகருணா, பிரதி அமைச்சர் முனீர் மௌலவி உட்பட அந்த அமைச்சின் அதிகாரிகள் கொண்ட விசேட குழு இந்த வாரம் ஜெனிவா செல் கின்றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறு கின்றது. இதில், பங்கேற்கவே இந்தக் குழு அங்கு செல்கின்றது.



வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு கடந்த திங்கட்கிழமை ஜெனிவா சென்று இலங் கையின் நிலைப்பாட்டை அறிவித்து, நாடு திரும்பியுள்ளது. இந்தநிலை யிலேயே நீதி அமைச்சர் தலைமையில் விசேட குழு ஜெனிவா செல்லவுள் ளது.

இந்தக் குழு ஜெனிவாவில் உள்ளக நடவடிக்கைகளின் முன்னேற்றத்தைச் சுட்டிக்காட்டவும் உள்ளகப் பொறிமுறை விசாரணைகளை வலுப்படுத்தும் செயல் முறைகளை வலுப்படுத்தும் முயற்சி களிலும் ஈடுபடும் என்றும் கூறப்படு கின்றது.



# சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் யானை தாக்கி பரிதாப உயிரிழப்பு!

காட்டு யானை தாக்கி சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை அநுராதபுரம், கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்கு ட்பட்ட பெத்கேவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடையவர் ஆவார்.

இவர் தனது வயலைச் சுத்தம் செய்துகொண்டிருந்த போது காட்டு யானை தாக்கி உயிரிழந்துள்ளார் என்று கஹட்டகஸ்த ிகிலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ப.நோ.கூ. சங்கங்களின் பணியாளருக்கு செயற்றிறன் விருத்திக்கான செயலமர்வு

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

கிழக்கு மாகாண கூட்டுறவு சங்கங்களின் பணியாளர்களின் செயற்றிறனை விருத்தி செய்யும் நோக்கில், பல்வேறு பயிற்சித் திட்டங்களைக் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் முன்னெடுத்து வருகிறது.

இதற்கமைவாக கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளருமான பொ.தனேஸ்வரனி வழிகாட்டல் மற்றும் கல்முனை கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எம்.சி. ஜலால்தீனின் நெறிப்படுத்தலில் இவ்வாறு பல்வேறு துறைகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறன்றன.

இதன் ஓர் அங்கமாக அக்கரைப்பற்றில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பயிற்சிச் செயலமர்வில் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ.எம். பரீட், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.சி.எம். அஷ்ரப் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

கூட்டுறவுச் சங்கங்களின் அபிவிருத்திக்கும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணிப்பதற்குமான பொறுப்பு கூட்டுறவுத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்த வகையில் கூட்டுறவுத்துறையை முன்னேற்றும் பணியைக் கூட்டுறவுத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது.

நிலையான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கு கூட்டுறவு சங்கங்களுக்கு வழி காட்டுதல், தரமான உற்பத்திகள் மற்றும் சேவைகள் வழங்குவதனூடாக சமூக பொருளாதார வளர்ச்சிக்கு பங்களித்தல், உற்பத்தி தொழில் முயற்சிகள் போன்ற நோக்கங்களை அடைதல், கணக்கியலில் வெளிப்படைத் தன்மையை பேணுதல் என்பன இவ்வேலைத்திட்டத்தின் நோக்கங்கள் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.



# உசன் இராமநாதன் மகா வித்தி. பரிசில் நாள் நிகழ்வுகள் நாளை

மிருசுவில் உசன் இராமநாதன் மகா வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு நாளை (16) காலை 08.30 மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்வில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டுவரை வித்தியாலயத்தில் கல்வி கற்று பாடரீதியாக மூன்று தவணைகளிலும் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், 2023, 2024 க.பொ.த (உ-த) பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மதிப்பளிப்பு,தேசியமட்டசாதனையாளருக்கான மதிப்பளிப்பு, புலமைப் பரிசில் கொடுப்பனவுகள், 2024 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு, 2023 ஆம் ஆண்டு தரம் 5இல் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு என்பன வழங்கப்படும் என்று அதிபர் அறிவித்துள்ளார்.





# மீராவோடை பிராந்திய போதை ஒழிப்பு செயலணியின் அங்குரார்ப்பண நிகழ்வு!

(எச்.எம்.எம்.பர்ஸான்)

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் மீராவோடை பிராந்திய போதை ஒழிப்பு செயலணி அங்குரார்ப்பண நிகழ்வு மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாலில் இடம் பெற்றது.

கிரான் கமநல சேவை நிலையத்தின் பெரும்போக உத்தியோகத்தரும் மீரா வோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவருமான எம்.ஏ.ரஷீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்த நிகழ்வில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் உப தவிசாளர் ஏ.எச்.நுபைர், மீரா வோடை கல்வி அபிவிருத்திக் குழு தலைவரும் பிரதேச சபை உறுப்பின ருமான கே.பி.எஸ்.ஹமீட், பிரதேச சபை உறுப்பினர்களான ஐ.எம்.றிஸ்வின், அலி அன்ஸார், ஏ.எல்.ஏ.கபூர், எம்.எஸ்.ஹலால்தீன் மற்றும் பாட சாலைகளின் அதிபர்கள், பள்ளிவாசல் களின் உறுப்பினர்கள், சமூகமட்ட அமைப்பின் உறுப்பினர்கள் எனப்ப லரும் கலந்து கொண்டனர்.

போதை ஒழிப்பு செயலணியின் தலைவராக மீரா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.ரஷீட் மற்றும் செய லாளராக மீராவோடை உதுமான் வித்தியாலய அதிபர் எம்.பி.முபாரக் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ள னர்.






# இன மத நல்லிணக்கத்தை பாதிக்கும் காரணிகள் தொடர்பாகக் கலந்தாய்வு

(த.சுபேசன்)

தேசிய சமாதான பேரவையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இன மத நல்லி ணக்கத்தைப் பாதிக்கும் காரணிகள் தொடர்பாக இளை யோருடன் கலந்துரையாடும் நிகழ்வு அண்மையில் சுண்டுக் குழியில் அமைந்துள்ள சொண்ட் அலுவலக மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள், சமுக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள், இளைஞர்கள் கலந்து கொண்டு இன மத ரீதியான நல்லிணகக்கத்தைப் பாதிக்கும் விடயங்கள் தொடர்பில் கலந்தாலோசித்தனர். அதற்கான தீர்வுத் திட்டம் தொடர்பிலும் ஆலோசித்திருந்தனர்.





# பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு பிரதேச சபையால் பாராட்டு!

(றிபாஸ்)

சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் நீண்டகாலமாக பொறுப்பதிகாரியாக கடமையாற்றி இடமாற்றம் பெற்று சென்றுள்ள கே.டி.எஸ்.ஜயலத்தின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு சம்மாந்துறை பிரதேச சபையில் இடம்பெற்றது.

பிரதேச சபையின் தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் தலைமையில், இடம்பெற்ற இந்த நிகழ்வில் உப தவிசாளர் வீ. வினோகாந், செயலாளர் எம்.ஏ.கே. முஹம்மட் உட்பட சபை உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.









# காரைதீவில் சிறந்தமுதியோர் சங்கமாக கண்ணகி முதியோர் சங்கம் தெரிவானது!

(வி.ரி. சகாதேவராஜா)

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு கிராம மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டியில் காரைதீவு பிரதேச செயலாளர் பிரிவில் கண்ணகி முதியோர் சங்கம் சிறந்த கிராமிய முதியோர் சங்கமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இதனைக் காரைதீவு பிரதேச செயலாளர் ஜி.அருணன் கண்ணகி முதியோர் சங்கத் தலைவர் த.சிவானந்தராஜாவிடம் அறிவித்துள்ளார்.

இந்த சங்கம் மாவட்ட மட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச முதியோர் தினத்தை முன்னிட்டு மாவட்ட சிறந்த கிராமிய முதியோர் சங்கம் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்தல் என்ற நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் நிகழ்வு நடைபெறவுள்ளது.





# பாவிக்க முடியாது சேதமடைந்துள்ள வீதிகள் உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

## அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உறுப்பினர் சிறாஜ்

(றிபாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு உட்பட்ட ஒபீஏ வீதி மிக நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப் படுவதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதனை உடனடியாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று பிரதேச சபை உறுப் பினர் ஐ.ஏ.சிறாஜ் கோரிக்கை விடுத் துள்ளார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை யின் மாதாந்த அமர்வு தவிசாளர் ஏ.எஸ். எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற போது அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்,

ஒலுவில், பாலமுனை, அட்டாளைச் சேனை ஊடாகச் செல்லும் இவ்வீதியில், அந்நூர் மகா வித்தியாலயம், ஆயுள் வேத ஆதார வைத்தியசாலை, கோணா வத்தை ஜும்ஆ பள்ளி, ஸஹ்வா அரபுக் கல்லூரி, றியாழுல் ஜென்னா ஜும்ஆ பள்ளி, அல் ஹிக்மா வித்தியாலயம் ஐஸ் தொழிற்சாலை உள்ளிட்ட மிக முக்கியமான நிறுவனங்கள் காணப்படு கின்றன. அந்த பகுதியில் உள்ள மக்க ளும் குறித்த நிறுவனங்களுக்கு வரு வோரும் பிரதான பாதையாக இந்த வீதியினையே பயன்படுத்திக் கொள் கின்றனர். இந்த வீதியானது குன்றும் குழியுமாக காணப்படுகிறது. இவ் வீதியால் பயணம் செய்வோர் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.




இவைதவிர பாலமுனை முதலாம், 3 ஆம் பிரிவு அல்ஹிதாயா பாடசாலை வீதி, அன்சார் மற்றும் நஜீம் சேவிஸ் சென்றர் முன் வீதிகள், உதுமாபுர வீதி யிலுள்ள குறுக்கு வீதிகள், உதுமாபுர உள்ளக மணல் வீதிகளை ஆர். டீ.எஸ் வீதி, பனையடி வீதி என்பனவற்றை புனரமைப்புச் செய்வதுடன், குறித்த ஒரு சில வீதிகளில் அவசியமாக வடி கான்களும் நிர்மாணிப்பட வேண்டும். மேற்குறித்த வீதிகளை அண்டிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் மழை காலங்களில் ஏற்படும் வெள்ளத்தால் தொடராக பாதிப்புற்று இடம்பெயர்ந்து செல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப் படுகின்றனர். வெள்ள காலங்களில் மக்களின் அன்றாட நடிவடிக்கைகளும், மாணவர்களின் கல்வி நடவடிக்கைக ளும் பாதிக்கப்படுகின்றன. மழை நீர் வடிந்தோடுவதற்கு முறையான வடிகான் கள் இல்லாமையே இதற்குப் பிரதான காரணமாகும்.

ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு முறையான திட்டமிடல்களுடன் வெள்ள நீர் வடிந்தோடக் கூடியவாறு வடிகான்களை நிர்மாணிப்பதற்கான ஏற்பாடுகளை பிரதேச சபை அவசரமாக மேற்கொள்ள வேண்டும். பாலமுனை பிரதேசத்தில் இரண்டு வட்டாரங்களிலும் நிர்மாணிக்கப்பட்டு பூரணப்படுத்தப் படாமல் காணப்படுகின்ற வடிகான்க ளைப் பூரணமாக நிர்மாணிப்பதுடன், மூடி போடப்படாமலுள்ள வடிகான்களைத் துப்பரவு செய்து மூடிகளை போடுவதற் கான நடவடிக்கையையும் மேற்கொள்ள வேண்டும்.

அல் ஹிதாயா வட்டாரத்துக்கு உட் பட்ட பிற கிராமங்களான ஹிறா நகர், திராய்க்கேணி, உதுமாபுரம், போன்ற வீதிகளும் மின்விளக்குயின்றி இருளில் மூழ்கிக் காணப்படுகிறது. வீதிகளுக்கு தெரு மின் விளக்குகளைப் பொருத்து வதற்கான நடவடிக்கையை அவசர மாகத் தவிசாளர் மேற்கொள்ள வேண் டும்.

திண்மக் கழிவுகளைச் சேகரிக்கும் வாகனங்கள் சில நேரங்களில் முன் அறிவித்தலின்றி வருகைதராததன் காரணமாக வீதியோரங்களில் பொதி செய்யப்பட்டு வைக்கும் வீட்டுக்கழிவுகள் உரிய வேளையில் எடுக்கப்படாது துர் நாற்றம் வீசுவதுடன் சுற்றுச் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படுகின்றது. குறிப்பாக பால முனை பிரதேசத்திலுள்ள பாடசாலைக ளுக்குத் திண்மக்கழிவு சேகரிப்புக்கான தொட்டிகள் கூடைகள் வழங்கப்பட வேண்டும்.- என்றார்.

# சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய இரண்டு உணவகங்களுக்கு சீல்!

(த.சுபேசன்)

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட நாச்சிக்குடா பகுதியி லுள்ள இரு உணவுகையாளும் சுகாதார சீர்கேட்டுகளுடன் இயங்கியமையால் நீதிமன்ற உத்தரவுக்கமைய சுகாதார பரிசோதகர்களால் சீல்வைக்கப்பட்டன.

பூநகரி மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் தலைமையில் பிரதேச பொதுசுகாதார பரிசோதகர்கள் இணைந்து நடத்திய திடீர் பரிசோதனையின் போது சுகாதாரக் குறைபாடுகள் இனங்காணப்பட்ட நான்கு உணவு கையாளும் நிலையங்களுக்கும் எதிராகக் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முழங்காவில் பொது சுகாதார பரிசோதகர் தர்மிகனால் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டது.

இதன்போது குற்றங்கள் இனங்காணப் பட்டதைத் தொடர்ந்து மொத்தமாக நான்கு வியாபார நிலையங்களுக்கும் எழுபத்தை யாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. மிக மோசமான சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய இரண்டு உணவு கையாளும்



நிலையங்கள் சீர்செய்யப்படும்வரை தற்காலிகமாக நீதிமன்ற உத்தரவுக்க மைய சீல் செய்யப்பட்டன.

இந்த உணவுகையாளும் நிலையங் கள் குளிரூட்டியில் சமைக்காத இறைச்சி, சமைத்த பெருமளவான றொட்டிகள் மாச டையக்கூடிய வகையில் காணப்பட்டுள்ளன.

கழிவு நீர் உரிய வகையில் விடப்பட வில்லை, சமையலறையில் சமைத்த உணவு மாசடையக் கூடியவாறு அடிப் படை சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்டுள்ளது.

உணவு கையாளும் உடல் தகுதிக்கான மருத்துவ சான்று இன்றி ஊழியர்கள் உணவைக் கையாண்டுள்ளனர்.

இவ்வாறான நிலைமைகளைக் கருத் தில் கொண்டு உணவகங்கள் சீல் செய் யப்பட்டுள்ளன.

# மஸ்கெலியா பிரதேச சபைப் பகுதிகளில் திடீர் மரண விசாரணை அதிகாரியை நியமிக்குக

## சுயாதீன வேட்பாளர் எஸ்.சுரேஸ் கோரிக்கை

**(மஸ்கெலியா)**

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் திடீர் மரண விசாரணை அதிகாரி கடந்த பல வருடங்களாக இன்மையால் இந்தப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் திடீர் மரணம் ஏற்படும் போது இந்தப் பகுதியில் உள்ள மக்கள் பாரிய அளவில் சிரமத்தை எதிர் நோக்குகின்றனர்.

எனவே சாமிமலை, மஸ்கெலியா, நல்லதண்ணி ஆகிய பகுதிகளில் மூன்று திடீர் மரண விசாரணை அதிகாரிகளை உடனடியாக நியமனம் செய்ய சம்பந்தப்பட்ட அமைச்சு முன் வர வேண்டும் என்று கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

மஸ்கெலியா பிரதேச சபையின் மாதாந்த அமர்வில் சுயாதீன வேட்பாளர் எஸ்.சுரேஸ் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள மறே தோட்ட பீக் ஃபீல்ட் பிரிவில் தனியார் ஒருவர் 2016 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விருந்தினர் விடுதி ஒன்றை அமைக்க முன் வந்து அந்தப் பகுதியை அபிவிருத்தி செய்ய முற்பட்ட வேளையில் புனித பூமி பகுதியில் இவ்வாறு அமைக்க கூடாது என்று இனவாத இயக்கம் ஒன்று அன்றைய அரசை எதிர்த்தது. அதன் காரணமாக அந்தத் திட்டம் கைவிடப்பட்டது அதன் காரணமாக புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் அபிவிருத்திகள் இல்லாமல் ஆக்கப்பட்டன.

தற்போது புனித பூமி என்று அழைக்கப்படும் சிவனொளி பாத மலை அடிவாரத்தில் உள்ள நல்லதண்ணி நகரில் திட்டமிட்டு ஏழு மது பானசாலைகள் உருவாகி யுள்ளன.

கடந்த காலங்களில் சிவனொளி பாத மலைக்கு வரும் யாத்திரியர்களை தியகல சந்தியில் வீதி தடை ஏற்படுத்தி போதைப் பொருள் மதுபானம் மற்றும் ஏனைய போதைப் பொருள்கள் கொண்டு வருபவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் மதுபான போத்தல்கள் உடைக்கப்பட்டன.

தற்போது புனித பூமி பகுதியில் ஏழு மதுபானசாலைகள் உள்ளன. கடந்த கால அரசும் தற்போதைய அரசும் இவ்வாறு புனித பூமியில் உள்ள விருந்தினர் விடுதியில் அதிக விலைக்கு விற்பனை செய்யும் மதுபான சாலைகள் உருவாக்கியுள்ளது.

இச் செயலுக்கு இன்றைய அரசு பொறுப்பேற்று புனித நகரில் உள்ள அனைத்து மதுபான சாலைகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.- என்றார்.



# புத்தளம் - கனமூலை முஸ்லிம் ம. வியில் இடம்பெற்றுள்ள கௌரவிப்பு நிகழ்வுகள்

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

புத்தளம் தெற்கு கோட்டத்துக்கு உட்பட்ட கனமூலை முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் தோற்றி சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலையின் கேட்போர் கூடத்தில் பாடசாலையின் அதிபர் பீ.எம். முஸ்னி தலைமையில் நடைபெற்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் உட்பட கற்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம். பைஸர் மரிக்கார், பழைய மாணவியர் சங்கம் மற்றும் சமூகவியலாளர் எம்.ஏ.எம். ஹஸ்மத்கான் ஆகியோரின் அனுசரணையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இம்முறை தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுபுள்ளிக்கு மேல் பெற்ற முகம்மது பஸ்லின் பௌஸ் அஹமட் (147), முகம்மது பைரூஸ் முகம்மது அப்னான் (141), அஜ்வாத் பாத்திமா அஸா (137) ஆகிய 03 மாணவர்களுடன் பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மூன்று மாணவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்டனர்.

சதகதுல்லா மஸியா 3 ஏ (கொழும்பு பல்கலைக்கழகம்), முகம்மது ஹில்மியாஸ் பஸ்ரா 3 ஏ (கிழக்கு பல்கலைக் கழகம்), முகம்மது பாயிஸ் முகம்மது பாதில் 2 ஏ 1 பி (தென் கிழக்கு பல்கலைக் கழகம்) ஆகிய மூவரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.







# புவியின் சூடேற்றம்: மனிதச் செயல்களும் மார்க்சியக் கண்ணோட்டமும்



**நாகராசா தனுஸ்காந்**
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

முதலாளித்துவ உலகில் இன்று உற்பத்தியும் நுகர்வும் அபரிமிதமான வளர்ச்சியை அடைந்துள்ளன. புதைபடிவ எரிபொருள்களாகிய நிலக்கரி, எரிவாயு, எண்ணெய் போன்ற பொருள்களை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கியது என்பதுதான் இந்த வியத்தகு வளர்ச்சிக்கு அடிப்படை ஆதாரமாக உள்ளது. இப்படி மனிதப் பயன்பாடுகளின் காரணமாக அதிகரித்து வரும் புவி வெப்பமயமாதல் என்பது இன்றைய உலகின் மிகப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது.

நிலக்கரி, எண்ணெய், எரிவாயு போன்ற புதைபடிவ எரிபொருள்களை முழுமையாகப் பயன்படுத்தத் தொடங்கியதில் இருந்து, முதலாளித்துவத்தின் கீழ் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி துரிதப்படுத்தப்பட்டது. இவ்வாறு உற்பத்தி சக்திகள் வளர்ச்சியுறும்போது, உண்மையில் ஒரு முரண் எழுவதன் வெளிப்பாடுதான் இந்தப் புவி வெப்பமயமாதல். 21 ஆவது நூற்றாண்டின் முதல் பத்தாண்டுகளிலேயே இந்த முரண் வெளிப்படத் தொடங்கிவிட்டது. உண்மையில் வர்க்க ஆட்சி என்பது இல்லாமல் இருந்திருக்குமானால், அனைவரின் சுதந்திரமான வளர்ச்சிக்கும் தேவையான பொருளாதார அடிப்படையை வழங்கி அனைவருக்குமான நல்வாழ்வை வழங்கும் வகையில் உற்பத்தி சக்திகள் வளர்ச்சி பெற்றிருக்கும்.

“மெடபாலிக் ரிஃப்ட்” (Metabolic Rift) – மார்க்சிய சுற்றுச்சூழல் விமர்சனம் – மார்க்ஸ் இயற்கையுடனான மனிதனின் உறவை மெடபாலிசம் (Metabolism) எனக் கூறினார். ஆனால், மூலதனவாத உற்பத்தி இந்த உறவை உடைத்து விட்டது.

விவசாயத்தில் அதிக ராசாயன உரங்கள் – மண் உற்பத்தி வலிமை குறைவு, நகரமயமாதல், தொழிற் சாலை கழிவுகள் – காற்று, நீர், மண் மாசுபாடு.

இவ்வாறு, மனிதனும் இயற்கையும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு முறிந்து புவி வெப்பமயமாதல் தீவிரமடைந்துள்ளது.

**வெப்பமயமாதலின் அச்சுறுத்தல்**

அறிவியல் ஆய்வுகள் கூறுவதாவது, ஒவ்வொரு 1000 பில்லியன் தொன் கார்பனீரொக்சைட் உமிழ்வுக்கும், பூமியின் வெப்பநிலை சராசரியாக 0.45 பாகை செல்சியஸ் உயர்கிறது. தொழில்துறை புரட்சிக்கு முன்பாக 1850 இல் தொடங்கிய வெப்பநிலை உயர்வு, இன்று சுமார் 1.1 பாகை செல்சியஸாகிவிட்டது. இது வெறும் புவியியல் பிரச்சினை மட்டுமல்ல மனித வாழ்வுக்கும், உயிரினங்களுக்கும் ஆபத்தான சவால்.

இந்த பிரச்சினை உற்பத்திச் சக்திகளுக்கும் சமூக உறவுகளுக்கும் இடையே எழும் முரண்பாட்டின் வெளிப்பாடு. முதலாளித்துவ உலகம் இலாப நலனை முன்னிலைப்படுத்துவதால், சூழலின் அழிவு தொடர்கிறது. உலக சராசரி வெப்பநிலை 1850 – 1900 காலத்துடன் ஒப்பிடுகையில் 2011 – 2020 இடைப்பட்டக் காலத்தில்

தொடர்ச்சி▼

# புவியின் சூடேற்றம்: மனிதச் செயல்களும் மார்க்சியக் கண்ணோட்டமும்

தொடர்ச்சி▲

சுமார் 1.1 பாகை செல்சியஸ் உயர்ந்துள்ளது.

உதாரணமாக ஆஸ்திரேலியாவின் 2019 - 20 காட்டுத் தீ காலத்தில் சுமார் 3 பில்லியன் விலங்குகள் பாதிக்கப்பட்டன என்று றுறுகு மற்றும் ஆய்வுகள் தெரிவித்தன.

மேலும், 2022 இல் பாகிஸ்தானில் ஏற்பட்ட வெள்ளம் நாட்டின் சுமார் மூன்றில் ஒரு பகுதியை நீரில் மூழ்கச் செய்தது. 33 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டனர் என்று ருநைஉநக மற்றும் சம்மந்தப்பட்ட அறிக்கைகள் கூறுகின்றன.

### மாற்றுச் சக்தி ஆதாரங்களின் அவசியம்

சூரிய சக்தி, காற்று, நீர்மின், அணு, அலைசக்தி, ஹைட்ரஜன் போன்ற புதைபடிவமற்ற சக்தி ஆதாரங் களை நோக்கிச் செல்ல வேண்டிய அவசியம் அனை வரும் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், தொழில்நுட்ப மாற்றங்கள் பெரும்பாலும் முதலாளிகளின் இலாப நலனுக்கு ஏற்றதாக இல்லாவிட்டால், அவை செயல்படுத்தப்படுவதில்லை. இதனால், புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கு மாறும் வேகம் மந்தமாகிறது.

இதுவரை எடுத்துக்காட்டாக சில நாடுகள் மற்றும் துறைகள் முன்னேற்றங்களை செய்துள்ளன. அதே நேரத்தில் சில முன்னணி முதலாளித்துவ நாடுகள் புதைபடிவ எரிபொருள் உற்பத்தியில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. உதாரணத்துக்கு, சில நாடுகளில் மின்சார வாகனங்களின் விற்பனை வெகுஜனமாக அதிகரித்து வருகிறது. நோர்வேவில் 2023 - 2024 காலத்தில் புதிய கார்கள் விற்பனையில் மின்னியக் கார்களின் பகுதி மிகவும் உயர்ந்துள்ளது (2023 இல் சுமார் 82 வீதமும் - 2024 இல் 89 வீதமும் புதிய வாகனங்களில் மின் வகை என்று தகவல்கள் தெரிவிக் கின்றன). இது வாகனத் துறையில் ஒரு விரைவான மாற்றத்தின் உதாரணமாக உள்ளது.

மேலும், சூரிய சக்தி மற்றும் காற்று சக்தியின் விரிவாக்கம். சீனாவில் 2023 இல் சூரிய சக்தி நிறுவப்பட்ட திறன் பெருமளவாக உயர்ந்து 216.3 புறு புதிய PV நிறுவப்பட்டதாகச் சொல்லப்படுகிறது இது உலகளாவிய சோலர் வளங்கள் விருத்தியில் சீனாவின் தலைமையை காட்டுகிறது.

### வளர்ந்து வரும் நாடுகளின் நிலை

முன்னேறிய நாடுகள், தங்களின் கார்பன் உமிழ்வை குறைக்கும் பெயரில், வளர்ந்துவரும் நாடுகளின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்த முயல்கின்றன. தொழில் துறை மற்றும் விவசாய முன்னேற்றத்தைக் குறைப்பதன் மூலம், வறுமை மற்றும் பசியைத் தொடர்ந்து நிலைநிறுத்தும்கொள்கைகள்அமுல்படுத்தப்படுகின்றன. இதுவே உலகளாவிய வடக்கு - தெற்கு முரண்பாட்டை அதிகரிக்கிறது.

ஆனால், வளர்ந்துவரும் நாடுகளின் அரசுகள், இத்தகைய அநியாய நிபந்தனைகளுக்கு அடிபணிய முடியாது. ஏனெனில், அவை தங்கள் மக்களின் அடிப்படை தேவைகள் - உணவு, வேலை, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றை புறக்கணிக்கின்றன.

### இடதுசாரி அணுகுமுறையின் குழப்பங்கள்

சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு இடதுசாரிகளின் அணுகுமுறையிலும் குழப்பங்கள் உள்ளன. சிலர், தொழில்நுட்பமே பிரச்சினை என்று கருதி, அறிவியல்



முன்னேற்றத்தைப் புறக்கணிக்கின்றனர். சிலர், பழங்குடியினர் அறிவு, உள்ளூர் சமூக அனுபவம் போன்றவற்றால் புவி வெப்பமயமாதலைத் தீர்க்கலாம் என்று கருதுகின்றனர். ஆனால், இவை நிலைத்த தீர்வுகளை வழங்க முடியாது.

மார்க்சிய பார்வையில், தொழில்நுட்பம் சுரண்டலின் கருவி மட்டுமல்ல, அது சமூக முன்னேற்றத்துக்கும் பயன்படுத்தப்படலாம். எனவே, புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளைப் புறக்கணிக்காமல், அவற்றைச் சமூக நலனுக்காகப் பயன்படுத்தும் வழிகள் தேடப்பட வேண்டும்.

### ஏகபோக மூலதனத்தின் எதிர்ப்பு

அமெரிக்கா மற்றும் சில ஜி-7 நாடுகள், புதைபடிவ எரிபொருள்களில் இருந்து விலகத் தயங்குகின்றன. ஏனெனில், எரிசக்தி துறையில் ஆதிக்கம் செலுத்தும் கார்ப்பரேட்டுகளின் நலன்கள் பாதிக்கப்படும் என்ற பயம் அவர்களுக்குள் உள்ளது. இதனால், உலகளாவிய பசுமை மாற்றங்கள் பெரும்பாலும் காகிதத்தில் மட்டுமே நிலைத்திருக்கின்றன.

மேலும், சில நாடுகள் “Climate denialism” அதா வது, மனித செயற்பாடுகள் காரணமாக காலநிலை மாற்றம் ஏற்படவில்லை என்ற வாதத்தை முன்வைத்து, நடவடிக்கைகளை முழுமையாக மறுக்கின்றன. இது அறிவியலுக்கு எதிரான ஆபத்தான அணுகுமுறையாகும்.

### உலகளாவிய ஒத்துழைப்பு தேவை

புவி வெப்பமயமாதலை கட்டுப்படுத்த, சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியம். ஆனால், கொவிட்-19 காலத்திலும் நாம் கண்டது போல, உலகளாவிய ஒத்து ழைப்பு அரசியல், பொருளாதார சுவாரஸ்யங்களால் கட்டுப்படுத்தப்படுகிறது. எனவே, காலநிலை பிரச்சினை தீர்வு அரசியல் மற்றும் வர்க்கப் போராட்டத்துடன் நேரடியாக இணைந்துள்ளது.

### தீர்வு என்ன?

01. புதைபடிவ எரிபொருட்களின் பயன்பாட்டை குறைத்து, புதுப்பிக்கத்தக்க சக்திகளை விரைவாகக் கொண்டு வருதல்.
02. வளர்ந்து வரும் நாடுகளுக்கு நியாயமான சுமை பகிர்வு, தொழில்நுட்பம் மற்றும் நிதி ஆதரவு வழங் குதல்.
03. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்தை சமூக நலனுக்காகப் பயன்படுத்துதல்.
04. உலகளாவிய வடக்கு - தெற்கு முரண்பாட்டைத் தாண்டி உண்மையான ஒத்துழைப்பை உரு வாக்குதல்.

புவி வெப்பமயமாதல் என்பது இயற்கையுடனான மனிதனின் முரண்பாட்டின் புதிய கட்டமாகும். இது அரசியல், பொருளாதார மற்றும் சமூக சவால்களை உள்ளடக்கியது. அதற்கான தீர்வு, சீரான அறிவியல் முன்னேற்றம், நியாயமான வளவழங்கல், உலகளாவிய ஒத்துழைப்பு மற்றும் வர்க்க முரண்பாட்டை உணர்ந்து செயற்படுதலால் மட்டுமே சாத்தியம். இல்லையெனில், புவி வெப்பமயமாதல் மனித குலத்தின் எதிர்காலத்தை மிகப்பெரிய ஆபத்தில் தள்ளிவிடும்.

# தவிர்க்க முடியாத இயக்கம் என நம் உழைப்பால் உணர்த்துவோம்

## தொண்டர்களுக்கு பிரேமலதா கடிதம்



தமிழகத்தில் யாரும் தவிர்க்க முடியாத மாபெரும் இயக்கம் தே.மு.தி.க. என்று நம் உழைப்பால் உணர்த்துவோம் என பிரேமலதா தெரிவித்துள்ளார்.

21 ஆம் ஆண்டு தொடக்கத்தையொட்டி தொண்டர்களுக்கு தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா எழுதிய கடிதத்தில்,

“சாதி, மதத்துக்கு அப்பாற்பட்ட கட்சியாக ‘ஒரே குலம் ஒரே இனம்’ என்ற கோட்பாட்டோடு சனாதனம், சமதர்மம், சமத்துவத்தைக் கடைப்பிடிக்கும் கட்சியாக தே.மு.தி.க . என்றும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

2026 சட்டப்பேரவைத் தேர்தல் மிகப்பெரிய சவாலாகும். இத்தேர்தலிலும் நாம் மகத்தான வெற்றி பெற அனைவரும் ஒன்றாக உழைப்போம். ஜனவரி 9 இல் கடலூரில் நடைபெற உள்ள மக்கள் உரிமை மீட்பு மாநாட்டில் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு வெற்றியடையச் செய்வது நம் ஒவ்வொருவரின் கடமை.

தே.மு.தி.க. இன்று தமிழ்நாட்டில் அசைக்க முடியாத சக்தி என்றும், தமிழ்நாட்டில் யாரும் தவிர்க்க முடியாத இயக்கம் என்றும், நம் உழைப்பால் உணர்த்துவோம். ‘தமிழன் என்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா’ என்ற தலைவரின் தாரக மந்திரப்படி எட்டுத்திக்கும் நமது முரசு வெற்றி முரசாகக் கொட்ட அனைவரும் ஒன்றாக இணைந்து உழைப்போம், வெற்றி பெறுவோம்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.

# விஜய் தலைமையில் கூட்டணி அமையும்

## டி.டி.வி. தினகரன் தகவல்



விஜய் தலைமையில் தமிழகத்தில் நிச்சயம் ஒரு கூட்டணி அமையும் எனவும் அதில் அ.ம.மு.க. இணைவது குறித்து தற்போது சொல்ல முடியாது என்றும் அ.ம.மு.க. பொதுச் செயலாளர் டிடிவி.தினகரன் தெரிவித்துள்ளார்.

அரியலூரில் செய்தியாளர்களிடம் நேற்று அவர் கருத்து தெரிவிக்கையில்,

“பா.ஜ.க. கூட்டணியில் முதல்வர் வேட்பாளராக பழனிசாமி இருக்கும் போது, நாங்கள் எப்படி அந்த கூட்டணியில் இருக்க முடியும்? முதல்வர் வேட்பாளராக பழனிசாமி இருக்கக்கூடாது என்பதுதான் எங்களது கோரிக்கை. த.வெ.க. தலைவர் விஜய் பிரச்சாரத்தில் ஏராளமான இளைஞர்கள், இளம் பெண்கள், 40 வயதுக்கு உட்பட்டவர்கள் திரண்டிருந்தனர்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பாணியில் விஜய் பேசவில்லை. பெரம்பலூருக்கு விஜய் சென்றபோது நள்ளிரவாகிவிட்டதால், அவர் அங்கு பிரச்சாரம் செய்யவில்லை. தமிழகத்தில் த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் நிச்சயம் ஒரு கூட்டணி உருவாகும். அதில் அ.ம.மு.க. இணைவது குறித்து தற்போது சொல்ல முடியாது.

விஜய் தலைமையில் ஒரு கூட்டணியும், சீமான் தலைமையில் ஒரு கூட்டணியும் நிச்சயம் அமையும். தமிழகத்தில் நான்கு முனை போட்டி நிச்சயம் உண்டு.” என்று தெரிவித்துள்ளார்.

# இணையவழி சூதாட்ட வழக்கில் நடிகைகளுக்கு அழைப்பாணை

இணையவழி சூதாட்ட வழக்கில் பொலிவுட் நடிகை ஊர்வசி ரவுத்தேலா மற்றும் முன்னாள் எம்.பி. மிமி சக்ரவர்த்தி ஆகியோருக்கு அமுலாக்கத்துறை அறிக்கை அனுப்பியுள்ளது.

இணையவழி சூதாட்ட செயலிகள் மூலம் சட்ட விரோதமாக, 2,000 கோடி இந்திய ரூபா பணப் பரிவர்த்தனை நடந்தது தொடர்பாக இந்தியா முழுதும் அமுலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

பாரிமேட்ச் என்ற சூதாட்ட செயலியைப் பயன்படுத்தி போலிக் கணக்குகள் உருவாக்கப்பட்டு பணமோசடி நடந்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இணையவழி சூதாட்ட செயலி விளம்பரத்தில் நடித்த பிரகாஷ் ராஜ், விஜய் தேவரகொண்டா, ராணா டகுபதி, பிரபல கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னா உள்ளிட்ட 29 பிரபலங்கள் மீது ஏற்கனவே அமுலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்துள்ளது.



இந்த வழக்கின் அடுத்த கட்ட நடவடிக்கையாகவே, பொலிவுட் நடிகை ஊர்வசி ரவுத்தேலாவுக்கு அமுலாக்கத்துறை அறிக்கை அனுப்பியுள்ளது.

செப்ரெம்பர் 16 ஆம் திகதி டில்லியில் உள்ள அமுலாக்கத்துறை தலைமையகத்தில் முன்னிலையாக வேண்டும் என்று அவருக்கு உத்தரவிட்டுள்ளது.

அதேபோல், திரிணாமுல் காங்கிரஸ் முன்னாள் எம்.பி மிமி சக்ரவர்த்திக்கும் இதே வழக்கில் செப்டம்பர் 15 அன்று ஆஜராக வேண்டும் என்றும் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.




# இஸ்ரேலின் தாக்குதலை கண்டித்து கட்டாரில் அரபு - இஸ்லாமிய தலைவர்கள் ஆலோசனை

இஸ்ரேலைக் கண்டித்து கட்டாரில் அரபு - இஸ்லாமிய தலைவர்கள் முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்றை நடத்தவுள்ளனர்.

கட்டார் தலைநகர் டோஹாவில் இந்த அவசர கூட்டம் நடபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கட்டார் தலைநகரில் எவ்வித முன்னறிவிப்புமின்றி இஸ்ரேல் அத்துமீறி நடத்திய தாக்குதலுக்கு கண்டனம் வலுத்து வருகின்றது.

டோஹாவில் ஹமாஸ் தலைவர்களைக் குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல் இஸ்ரேலுக்கு கடும் கண்டனத்தை ஈட்டித் தந்துள்ளது.

இதனைக் கண்டித்து, டோஹாவில் அரபு - இஸ்லாமிய தலைவர்களின் ஆலோசனைக் கூட்டத்துக்கு கட்டார் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தநிலையில், நடைபெற உள்ள ஆலோசனை கூட்டத்தில் பங்கேற்க மத்திய கிழக்காசிய தலைவர்கள் பலர் டோஹாவுக்கு வருகை தந்துள்ளனர்.

அப்போது இஸ்ரேலின் தாக்குதலைக் கண்டித்து முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரபு லீக் மற்றும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு உறுப்பினர்களை ஓரணியில் திரட்டும் இந்த ஆலோசனைக்கு முன்பாக, வெளியுறவு அமைச்சர்களின் கூட்டம் நடத்தப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு எதிராக தூதரக ரீதியாக அல்லது பொருளாதார ரீதியாக கடும் நடவடிக்கைகள் பாயுமா என்பதைக் குறித்து வரைவு அறிக்கை தயார் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# உயரமான கட்டடங்களை தாக்கி அழிக்கும் இஸ்ரேல்

இஸ்ரேலிய இராணுவம், நேற்று காசா நகரில் பல உயரமான கட்டடங்களைத் தாக்கியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வார ஆரம்பத்தில் நகரத்தில் உள்ள மக்கள் முழுமையாக வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டதன் பின்னர், இடம்பெற்ற பாரிய தாக்குதலில் இதுவும் ஒன்றாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல்களால் பல லட்சம் பாலஸ்தீன மக்கள் அவல நிலைக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தநிலையில் காசா மீதான இந்த தாக்குதல்களுக்கு மத்தியில், ஹமாஸினால் பிடித்து வைக்கப்பட்டுள்ள இஸ்ரேலிய பணயக்கைதிகளின் பாதுகாப்பு குறித்து இஸ்ரேலிய அமைச்சரவை ஆராயவுள்ளதாகப் பிரதமர் பெஞ்சமின் நெந்தன்யாகு தெரிவித்துள்ளார்.

# ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் வான் பரப்பில் அத்துமீறி நுழைந்தன

## ரொமேனியா குற்றச்சாட்டு

தனது வான்வெளியில் ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் அத்துமீறி நுழைந்தன என ரொமேனியா குற்றம் சுமத்தியுள்ளது.

எனினும் விமானங்கள் ஏதாவது சுட்டு வீழ்த்தப்பட்டதா என்று அந்த நாடு அறிவிக்கவில்லை.

இந்தநிலையில் ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் தமது வான்வெளியில் நுழைந்ததாகத் தெரிவித்த இரண்டாவது நேட்டோ அணி நாடு ரொமேனியாவாகும்.

ஏற்கனவே போலந்து நாட்டின் வான்வெளியிலும் ரஷ்யாவின் ஆளில்லா விமானங்கள் நுழைந்த சம்பவம் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்தநிலையில் ரொமேனியாவின் தகவல் குறித்து மொஸ்கோ எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை.



பக்கங்கள் - 02

கனடா முரசு

திங்கட்கிழமை | 15/09/2025

**டொரொண்டோ போராட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 10 பேர் கைது**



C2▶



# கேட்கும் திறன் குறைந்த இரு பெண்கள் ரயிலில் மோதி பரிதாபமாக உயிரிழப்பு

**கேட்கும் திறன் குறைந்த இரு கனடியப் பெண்கள் ரயிலில் மோதி பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**

**மொன்றியாலைச்சேர்ந்தஇரண்டுபெண்கள் போர்த்துகல் நாட்டில் இவ்வாறு விபத்தில் சிக்கியுள்ளனர்.**

**உயிரிழந்தவர்கள் குய்லெய்ன் புலாங்கர் (வயது 62) மற்றும் எலிச் பெனார்ட் (வயது 66) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

C2▶

# உலகின் சிறந்த விமான நிறுவனமாக ஏர் கனடா 6ஆவது முறையாக தெரிவு

ஏர் கனடா 6 ஆவது முறையாக உலகின் சிறந்த விமான நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இன்று நடைபெற்ற யீநுஓ 2026 விருது வழங்கும் விழாவில் கனடாவின் முன்னணி விமான நிறுவனமான ஏர் கனடா , உலகின் சிறந்த விமான நிறுவனமாக Five-Star Global Airline விருதை 6 ஆவது முறையாக வென்றுள்ளது.

பயணிகள் தரமதிப்பீடுகளின் அடிப்படையில் வழங்கப்படும் இந்த விருது ஏர் கனடா நிறுவனத்தின் பயணிகள் திருப்தி, பாதுகாப்பு மற்றும் சேவைத் திறன் ஆகியவற்றில் நிலைத்த சிறப்பை பிரதிபலிக்கிறது.

ஏர் கனடா தனது பயன் சேவையை முன்பதிவு முதல் தரையிறங்கும் வரை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளது.




பயணிகள் வசதிக்காக விரிவான அம்சங்கள், பரந்த இருக்கைகள், தரமான உணவுகள் மற்றும் சிறந்த in-flight entertainment வசதிகள் வழங்கப்படுகின்றன.

சுற்றுச்சூழல் பாதுகாப்பிலும் ஏர் கனடா முக்கிய பங்கு வகிக்கிறது. எரிபொருள் திறனுள்ள தொழில்நுட்பங்களை பயன்படுத்தி கார்பன் வெளியீட்டை குறைக்கும் முயற்சிகள், சுற்றுச்சூழல் மீது அக்கறை கொண்ட பயணிகளை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

பாதுகாப்பு மற்றும் புதுமை ஆகியவற்றிலும் ஏர் கனடா முன்னிலை வகிக்கிறது.

# டொரொண்டோ போராட்டத்தில் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பில் 10 பேர் கைது





டிடாரொண்டோவில் இடம்பெற்ற குடியேற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் எதிர்ப்புக் குழுவினருடன் மோதல் ஏற்பட்டதை அடுத்து 10 பேர் கைது செய்யப்பட்டனர் என டொரொண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஒருவரும் வேறும் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், ஏனையவர்கள் மீது எந்த குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை பொலிஸார் வெளிப்படுத்தவில்லை.

குடியேறிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது என்றும் பெருமளவு நாடு கடத்தலைத் தொடங்குங்கள் எனவும் போராட்டக்காரர்க்ள கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதற்கு எதிராக நூற்றுக்கணக்கான குடியேற்ற ஆதரவாளர்கள் அங்கு கூடி, 'நீங்கள் விரும்பியது நடைபெறாது, குடியேற்றவர்கள் இங்கே தங்குவார்கள்' என எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த கைது விவரங்களை விரைவில் அதிகாரப்பூர்வ செய்திக் குறிப்பு மூலம் வெளியிடப்படும் என டொரொண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# கனடாவிலுள்ள மக்களின் ஆயுள்காலம் உயர்ந்தது



கனடாவின் சமீபத்திய ஆயுள்கால புள்ளிவிவரங்கள், மக்கள் மீண்டும் சிறிது காலம் கூடுதலாக வாழ்கிறார்கள் என்பதைக் காட்டினாலும், அது நீண்டகால நம்பிக்கை தரும் போக்கு அல்ல என நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்.

2022 இல் 81.3 ஆண்டாக இருந்த பிறப்பிலேயே எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம், 2023 இல் 81.7 ஆண்டாக உயர்ந்துள்ளது.

இது கொவிட் 19 தொற்று பரவலுக்குப் பின் முதல் முறையாக உயர்வை பதிவு செய்துள்ளது. கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

பொதுவாக மரணங்களின் எண்ணிக்கை குறைந்தாலோ அல்லது மரணங்கள் பெரும்பாலும் முதிய வயதில் மட்டுமே நடந்தாலோ ஆயுட்காலம் அதிகரிக்கும். 2023 இல் கனடாவில் 7,162 போதைப்பொருள் விபத்து மரணங்கள் பதிவாகியுள்ளன.

இது இதுவரை பதிவான மிக உயர்ந்த எண்ணிக்கை என கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொவிட் பெருந்தொற்று ஏற்படுவதற்கு முன்னதாகவே மித மிஞ்சிய போதை மருந்து பயன்பாட்டினால் ஏற்படக் கூடிய மரணங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இன்னும் போதைப்பொருள் விபத்து மரணங்களின் தாக்கம் நீடிப்பதாகவும் ஆயுட்காலம் உயர்வடைவதில் இந்த காரணிகளும் முக்கியமானவை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

புகைபிடித்தல், மது அருந்துதல், உடற்பயிற்சி இல்லாமை போன்ற காரணங்களால் உருவாகும் நீண்டநாள் நோய்களும் நாட்டின் ஆரோக்கியத்தை பாதிப்பதாக கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

**கேட்கும் திறன்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர்ட்டோவிற்கு கிழக்கே 80 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மெசாவ் ஃப்ரியோ பகேயிரோஸ் ரயில் நிலையம் அருகே நதிக்கரையில் புகைப்படம் எடுத்து கொண்டிருந்த போது ரயில் மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயில் சாரதி ஒளி எழுப்பியும், பிரேக் போட்டாலும், நேரத்தில் நிறுத்த முடியாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த இருவருடன் இருந்த மற்ற இருவர் காயமின்றி உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவத்தில் இரண்டு கனடியர்கள் உயிரிழந்ததை கனடிய வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளதுடன், குடும்பத்தினருக்கு தேவையான தூதரக உதவி வழங்கப்படுவதாக தெரிவித்துள்ளது.

இது போர்த்துகலில் கியூபெக் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் உயிரிழக்கும் இரண்டாவது சம்பவமாகும்.

இதற்கு முன் இந்த மாதம், லிஸ்பனில் நடந்த புனிகுலர் தடம் புரண்ட விபத்தில் கியூபெக் மாநிலத்தைச் சேர்ந்த ஆண்ட்ரே பெர்ஜெரான் மற்றும் அவரது மனைவி பிளாண்டின் டாக்ஸ் உயிரிழந்திருந்தனர்.